கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

2026ம் வருடம் ஏப்ரல் மாதம் 02ம் தேதி வியாழக்கிழமை
இடைநிலை மனு எண். 8 /2026
இன்
அசல் வழக்கு எண்.243/2008
-----

1) சிங்கராஜ்
2) கௌதம் ... மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள்

/எதிர்/

1) போஸ் ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி
2) ராமத்தாள்
3) கண்ணம்மாள்
4) முத்தம்மாள்
5) சின்னத்தாயி
6) பால்பாண்டி
7) பாப்பா
8) துரைப்பாண்டி
9) இராமர்
10) ஜெயமணி
11) யதோயை ... 2 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/
2 முதல் 11 பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 02.04.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள் தரப்பு

வழக்கறிஞர் திரு.R.G.சங்கர்கணேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் திரு.K.ஸ்ரீநிவாசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கு கோப்பில் சேர்க்க அனுமதிக்க வேண்டி கட்டளை 8 விதி 1A(3) CPCன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வாதியால் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், மேற்படி பட்டாவின் கணினி நகல் பிரதிவாதி தரப்பு சான்று ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழியாக ஆட்சேபணை தெரிவித்து, அந்த வாய்மொழி ஆட்சேபணை இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**3) <u>தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.</u>**

இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) வழக்கு சொத்தை பொறுத்து மனுதாரர் பெயருக்கு பட்டா மாறி உள்ளதாகவும், மேற்படி பட்டாவின் கணினி நகல் பிரதிவாதி தரப்பு சான்று ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வாதியால் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கு கடந்த 2008 முதல் நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் வாதி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காகவும், கூடுதல் விசாரணைக்காகவும் நிலுவையில் இருந்து வருகிறது.

3.2) இந்நிலையில், 12ம் பிரதிவாதி தரப்பில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/12ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும், மனுதாரர் பட்டா குறித்து எதுவும்

குறிப்பிடப்படவில்லை. அதன்படி வழக்குரையில் குறிப்பிடாத சங்கதிகள் குறித்து வழக்கில் சாட்சியம் அளிக்க இயலாது என்பது நிலையான சட்ட நடைமுறை ஆகும். மேற்படி பட்டாவானது கடந்த 2021ல் ஏற்பட்ட ஆவணமாக உள்ளது. அதன்படி, அசல் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணமாகவே காணப்படுகிறது. மேற்படி ஆவணம் குறித்து எவ்வித வழக்குரையும் இல்லாத நிலையிலும், அசல் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணமாக உள்ள நிலையிலும், மேற்படி மனுதாரர் தரப்பில் ஏற்பட்ட பட்டாவானது அசல் வழக்கில் ஒரு சான்று ஆவணமாக சட்டப்படி ஏற்க இயலாது. எதிர்மனுதாரர் தரப்பில் வாதத்தின்போது அசல் வழக்கை காலம் கடத்தும் விதமாகவே இவ்வாறு இடைநிலை மனுக்கள் அவ்வப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எடுத்துரைத்த வாதத்தை கருத்தில் கொண்டும், இம்மனுவானது ஏற்கத்தக்க சட்டப்படியான ஆவணமாக இல்லை என்று தீர்மானித்து இந்த மனு நிராகரித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகளின் இம்மனுவானது நிராகரித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.02 17:25:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

**<u>இணைப்பு:</u>**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.02 17:25:22 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 8 /2026
அசல் வழக்கு எண்.243/2008
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 02.04.2026